பதிவு எண் : M. 6311 ★ தொலைபேசி : 51331 ★ நிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ, எம்.பி.

மலர் : 15] சென்னை : ஆனி 9உ (23—6—67) வெள்ளி ★ வெளியூர் : ஆனி 10உ (24—6—67) சனி [இதழ் : 8

# தாறுமாறுகப் பேசுவோர்மீது நடவடிக்கைஎடுக்கப்படுமா?

## சட்டமன்றத்தில் சரமாரியான கேள்விகள்

### அந்தந்தக் கட்சித் தலைவர்களுக்கு எழுதியனுப்புமாறு அண்ணு கோரிக்கை

சென்னை, சூன் 23—

"நமது மாநிலத்தில் உள்ள எல்லா அரசியல் கட்சிகளின் நடவடிக்கைகளையும் கண்காணித்துவந்த 'ஸ்பெஷல் பிராஞ்சு' வேலை ரத்து செய்யப்பட்டது உண்மையா?"

என்று இன்று சட்டமன்றத்தில், திரு. வி. கே. கோதண்டராமன் கேட்ட கேள்விக்கு, முதலமைச்சர் அறிஞர் அண்ணு அவர்கள், 'இந்தக் கேள்விக்குப் பதிலளிப்பது பொதுநலனுக்கு உகந்ததல்ல' என்று கூறினர். இதனைத் தொடர்ந்து பல துணைக் கேள்விகள் எழுந்தன.

அரங்கண்ணல் :— "காங்கிரசுக் கட்சிக் கூட்டங்களில் சட்ட விரோதமான வார்த்தைகளைப் பயன்படுத்திப் பேசுகிருர்களே—அவர்கள்மீது என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசிக்கப் பட்டுள்ளது?"

அண்ணு :— "பொதுக்கூட்டங்களுக்குச் சுருக்கெழுத்தாளர்களை அனுப்பிவைக்குமாறு காங்கிரசுக் கட்சியிலிருந்து சிலர் கோரிக்கை அனுப்பியிருக்கின்றனர். பொறுப்புள்ள தலைவர்கள் அப்படிக் கோரினுல் கவனிக்கப்படும்."

கே. விஞயகம் :— "எந்தக் கட்சியைச் சேர்ந்த கூட்டமாஞலும் கண்காணிக்க ஏற்பாடு செய்யப்படுமா?"

**அண்ணு :— "பதுக்கல்காரர்களையும், கள்ளச்சந்தைக்காரர்களையும், சமூக விரோதிகளையும் கண்காணித்து வழக்குத் தொடருவதுதான் அவசியம் என்று இந்த அரசு கருதுகிறது.**

**"தாறுமாருகப் பேசுவோர் மீது ஐந்து ஆண்டுக்கு ஒரு முறை வெற்றிகரமாக வழக்கு நடைபெறும் என்று கருதுகிறேன்."**

மேலும் கேள்விகட்கு அண்ணு பதிலளித்தபோது கூறியதாவது :-

"தாறுமாருகப் பேசுபவர் எந்தக் கட்சியைச் சேர்ந்தவராஞலும், அந்தக் கட்சித் தலைவர்கட்கு அந்தப் பேச்சை எழுதியனுப்பும்படி கேட்டுக் கொண்டிருக்கிறேன். தி. மு. கழகத்தைச் சேர்ந்தவர்களில் யாரேனும் அப்படிப் பேசினுல் எனக்கு எழுதியனுப்பப்படுகிறது. அதேபோல் மற்றத் தலைவர்கட்கும் அனுப்பப்படுகிறது."

## உழைப்பைப் பயன்படுத்தும் திட்டம்

### 'பலன் அளிக்கிறது' என்கிருர் அமைச்சர்

சென்னை, சூன் 22—

"சமுதாயநலத் திட்டப் பகுதிகளில், கிராம மக்களின் உழைப்பைப் பயன்படுத்திக் கொள்ளும் திட்டத்தின் மூலம் நல்லபலன் கிடைத்திருக்கிறது. இத்திட்டத்தின் மூலம் 1966—67-ல், 72 சமுதாயநலத் திட்டப் பகுதிகளில் கிராம மக்களின் உழைப்புப் பயன்படுத்திக் கொள்ளப்பட்டது; இதற்காக ரூ. 52,81,633 செலவிடப்பட்டது"

எனறு, சட்டமன்ற மேலவையில், உள்ளாட்சித்துறை அமைச்சர் எம். முத்துசாமி, கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

## மலேசியத் தேசிய மொழியில் என். வி. நடராசன் நன்றியறிப்பு

அலோர்காஜா, சூன் 19—

மலாக்கா தமிழ் இளைஞர் மன்றத்தின் சார்பில் நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில், தி.மு. கழக அமைப்புச்செயலாளர் என்.வி. நடராசன் எம்.எல்.சி. அவர்கள் மலேசியத் தேசிய மொழியில் பேசினுர்.

கூட்டத்தில் சிறப்புரை ஆற்றிய மலாக்கா சட்டமன்ற அவைத் தலைவர் துவான் ஹாஜி தாலிப் பின் கரீமுக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் என்.வி. நடராசன் அவர்கள் மலேசியத் தேசிய மொழியில் பின்வருமாறு கூறினுர்:—

**"துவான்; துவான், டான் புவான், புவான் சிக்லியான் சாயமெமுச்சாப்கான் திரிமா கசி கேப்பாடா துவான் ஹாஜி தாலிப் பின் கரீம்."**

மலாக்கா முதலமைச்சர் இஞ்சே அப்துல் கபார் பின் பாபா அனுப்பியிருந்த சிறப்புச் செய்தியை, அவைத் தலைவர் துவான் ஹாஜி தாலிப் வாசித்தார்.

## இலஞ்ச ஊழலைத் தடுக்கத் தனி நிறுவனம் ஏற்படுமா?

### சட்டமன்றக் கேள்விகட்கு அண்ணு தந்த பதில்

சென்னை, சூன் 23—

"இம்மாநிலத்தில் இலஞ்ச ஊழல்களை விசாரிக்கத 'தனி நிறுவனம்' (Independent body) அமைக்கும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா?"

என்று இன்று சட்டமன்றத்தில் திரு. எஸ். சிவசுப்பிரமணியம் கேட்ட கேள்விக்கு, 'இல்லை' என்று விடையளித்தார் முதலமைச்சர் அண்ணு.

இதனைத் தொடர்ந்து எழுப்பப்பட்ட துணைக கேள்விக்கு அண்ணு பதிலளிக்கையில் தெரிவித்ததாவது :—

"'ஆம்புட்ஸ்மன்' போன்ற அமைப்பு ஒன்றை ஏற்படுத்தும் யோசனை மத்திய அரசில் இருந்துவருகிறது, எல்லா மாநில அரசுகளையும் மத்திய அரசு கலந்தாலோசிக்க இருக்கிறது. விரைவில் இந்த அமைப்பு ஏற்படும் என்று நம்புகிறேன்."

ஈ. ஆர். கிருஷ்ணன் :— "'சதாசார் சமிதி' என்ற பெயரில் ஒன்றை ஏற்படுத்திஞர்கள்; அதில் உள்ள அனைவரும் காங்கிரசுக்காரர்களாகவே இருக்கின்றனர். 'விஜிலன்ஸ் கமிட்டி'யிலும் போலீசு அதிகாரிகளே இருப்பதால், இலஞ்ச ஊழல் புரிந்த பலர் தப்பித்துக்கொள்ள இடமிருக்கிறது. ஐ. ஏ. எஸ். போன்ற உயர் அதிகாரிகள் கொண்ட குழு அமைக்கப் படுமா?"

பதில் :— "இப்படிப்பட்ட குழுக்களில் உயர் நீதிபதிகளும் இருக்கிருர்கள். எவ்வளவு இறுக்கமாக வலை பின்னப்பட்டாலும், சில மீன்கள் தப்பித்துக்கொள்வது இயற்கை; அதைப்போல் சிலர் தப்பித்துக்கொண்டிருக்கலாம்."

ஹண்டே :— "ஒரிசா மாநிலத்தில் முன்னுள் அமைச்சர்கள் மீதான ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரிக்க ஏற்பாடு செய்திருப்பதுபோல் இங்கும் செய்யப்படுமா?"

அண்ணு :— "இந்த மாநிலத்தில், குறிப்பிட்ட எந்த முன்னுள் அமைச்சர்மீதும் அவ்விதக் குற்றச்சாட்டுகள் இல்லை. அவ்விதம் இங்கு அமைக்கவேண்டிய தேவையும் எழவில்லை."

கேள்வி :— "புதிய அரசில் இலஞ்ச ஊழல்கள் குறைந்திருக்கிறதா?"

பதில் :— "இந்த அரசைப்பற்றி இந்த அரசிடம் கேட்டால், 'குறைந்திருக்கிறது' என்றுதான் பதில் கிடைக்கும் என்பது உறுப்பினருக்குத் தெரியும்."

கேள்வி :— "இலஞ்ச ஊழல்களைத் தவிர்க்கும் வகையில் படம் எடுக்கவோ, விளம்பரம் மூலம் அறிவுறுத்தவோ ஏற்பாடு செய்யப்படுமா?"

பதில் :— "உறுப்பினரின் இந்த யோசனையும் பரிசீலிக்கப்படும்."

## அரசாங்க பஸ்களை ஏலம் விடுவதில் புதிய நடைமுறை

### சட்டமன்றத்தில் அமைச்சர் கருணுநிதி அறிவிப்பு

சென்னை, சூன் 23—

"அரசுப் போக்குவரத்து பஸ்களை கடந்த மார்ச் மாதத்தில் ஏலம்விட்டதன் மூலம் ரூ. 3,84,822 கிடைத்தது"

என்று இன்று சட்டமன்றத்தில் பொதுப் பணித் துறையமைச்சர் மு. கருணுநிதி அறிவித்தார்.

கேள்வி :— "அரசாங்கப் பஸ் எப்போது ஏலம் விடப்படுகிறது?"

பதில் :— "பழுது ஏற்பட்டு, ஏலத்தில் விடவேண்டிய அவசியம் ஏற்படும்போதெல்லாம் ஏலம் விடப்படுகிறது."

கேள்வி :— "ஏலம் விடப்படுவது பத்திரிகை வாயிலாக விளம்பரப்படுத்தப்படுகிறதா?"

பதில் :— "முந்திய அரசின் மரபைப் பின்பற்றி சென்ற மார்ச்சுத் திங்களில் ஏலம் விடப்பட்டது. இனி பத்திரிகையில் விளம்பரம் செய்யப்படுவது குறித்துப் பரிசீலிக்கப்படும்."

கேள்வி :— "எத்தனை ஆண்டுக் காலம் கழித்துப் பஸ்கள் ஏலம் விடப்படுகின்றன?"

பதில் :— "லேலண்ட் பஸ் 5 ஆண்டும், பென்ஸ் 5 ஆண்டும், பர்கோ 4 ஆண்டும் ஓட்டப்படுகின்றன. இவற்றை மேலும் ஓராண்டுக்குப் பயன்படுத்தும்படி உத்தர விடப்பட்டிருக்கிறது."

கே :— "முன்பிருந்த அரசு, தனி முதலாளிகளுக்கு ஏலத்தில் சலுகை காட்டியதாகக் கூறப்படுகிறது; இந்த அரசு அது பற்றி என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டுள்ளது?"

ப :— "சில முதலாளிகள் முன் கூட்டியே கூடிப்பேசிக்கொண்டு ஏலம் கேட்டதாக அறியப்படுகிறது. எனவே, இனி அப்படிச் செய்ய வழியில்லாதபடி பார்த்துக்கொள்ளப்படும். பத்திரிகையில் விளம்பரம் செய்வது பற்றியும் யோசிக்கப்படும்."

கே :— "இப்போது அரசாங்க பஸ்கள் இலாபத்தில் ஓடுகின்றனவா? நட்டத்தில் ஓடுகின்றனவா?"

ப :— "இப்போது வருமானம் அதிகம். இலாப நஷ்டக் கணக்குப் பார்க்கவில்லை."

கே :— "ஏலம் விடும்போது கல்வி நிறுவனங்களுக்குச் சலுகை வழங்கப்படுமா?"

ப :— "அது பற்றியும் யோசிக்கப்படும்."

## சு. ம. திருமணச் சட்டம் விரைவில் வரும்

### மாநில அரசுக்கு இதில் முழு உரிமை உண்டு

### சட்டமன்றத்தில் அமைச்சர் மாதவன் விளக்கம்

சென்னை, சூன் 23—

"சுயமரியாதைத் திருமணங்களைச் சட்டப்படி செல்லுபடியாக்கும் வகையிலான சட்டம் விரைவில் கொண்டுவரப்படும்" என்று இன்று சட்டமன்றத்தில் அமைச்சர் மாதவன் அறிவித்தார்.

மேலும் பல கேள்விகட்கு அமைச்சர் பதிலளிக்கையில் கூறியதாவது :—

**"இதுவரை நடந்துள்ள எல்லா சு. ம. திருமணங்களையும் செல்லுபடியாக்கும் வகையிலேயே சட்டம் உருவாக்கப் பட்டுவருகிறது. இத்தகைய சட்டத்தை இயற்ற இந்த மாநில அரசுக்கு அரசியல் சட்டப்படியே முழு உரிமை இருக்கிறது. அந்த உரிமையின் அடிப்படையிலேயே இச் சட்டம் கொண்டுவரப்படவிருக்கிறது.**

"இந்து மதத்திலேயே பல உட்பிரிவுகள் இருந்தபோதிலும். நாடு முழுவதிலும் உள்ளவர்களை இந்து மதத்தினராகவே கருதி, 1955-ல் இந்திய அரசு இந்து மதச் சட்டத் தொகுப்பினை உருவாக்கியது. அப்போது, தமிழ்ப் பண்பாடுகளையும் இந்து மதத்தின்கீழ் ஏற்றுக் கொண்டுதான் சட்டத்தைத் தொகுத்தார்கள்.

"இந்து மதத்தை ஏற்காதவர்கள்—தமிழ்ப் பண்பாட்டைக் காக்க வேண்டும் என்பவர்கள்—சுயமரியாதை காக்கப்பட வேண்டும்என்று விரும்பியவர்கள்தான் சுயமரியாதைத் திருமணங்களைச் செய்துகொண்டனர்.

"மத்திய அரசின் இந்து மதச் சட்டத் தொகுப்பிலும் தமிழ்ப் பண்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பதால், இப்போது சுயமரியாதைத் திருமணங்களைச் செல்லுபடியாக்கச் சட்டம் கொண்டு வருகிருேம். இதில் எந்தவிதச் சட்டச் சிக்கலும் எழவில்லை.

"கொண்டுவரப்படும் சட்டத்தில் எந்தெந்தவகைத் திருமணங்களைச் சேர்க்கலாமோ அவற்றையெல்லாம் சேர்க்கிருேம். உறுப்பினர்களும் தங்கள் யோசனைகளைத் திருத்தத் தீர்மானம்மூலம் கொடுக்கலாம்."

# பொருளாதார மேம்பாட்டுக்கு வேளாண்மையே அடிப்படை

## இந்தப் பேருண்மையை ஏற்காததால் நலிவுகள் நெளிகின்றன !

நடப்பு ஆண்டுக்குரிய திட்டத்தை உருவாக்கும்பொழுது, வேளாண்மை உற்பத்தி குறித்த திட்டங்களே நமது நிதி வசதியின் முதல் பொறுப்பாக விளங்கும் என்பது வெள்ளிடைமலை.

தொடர்ந்து நடத்தப்பட்டு வந்த ஐந்தாண்டுத் திட்டங்களின் போது, 'நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்கு வேளாண்மைத் துறையின் வலிவே அடிப்படையானது என்ற பேருண்மையை உணர்ந்து செயல்படாததாலேயே, இன்றைய நலிவுகள் நெளிகின்றன' என்று விற்பன்னர்கள் எடுத்துக்காட்டியுள்ளனர் என்பதையும், திட்டங்களை நடாத்தியவர்களும் தவற்றினை ஒப்புக்கொண்டுள்ளனர் என்பதையும் பேரவையினர் அறிவர் என்று கருதுகிறேன்.

மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தை நமது மாநிலத்தில் துவக்கி நடத்தியபோது, அன்றைய அரசினர், '53 இலட்சம் டன்னுக இருக்கும் உணவு உற்பத்தி 70 இலட்சம் டன் அளவுக்கு உயரும்' என்ற இனிப்பான நம்பிக்கையைத் தெரிவித்தனர்.

அதன்படி செம்மையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உணவுஉற்பத்தி வளர்ச்சியடைந்திருப்பின், இன்றைய இன்னல் எழ நியாயமில்லை; ஆனல், 1965—66-ல், 52.59 இலட்சம் டன் அளவே உற்பத்தி ஆயிற்று.

மூன்ரும் திட்டம் முடிவடைந்து நான்காம் திட்டத்தில் அடியெடுத்து வைக்கும்போது—உணவு உற்பத்தியைப் பொறுத்தமட்டில் — புறப்பட்ட இடத்திலேயே இருக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

இந்நிலையில், நாம், வளர்ந்துவரும் நமது மக்கள் தொகையினரின் குறைந்த அளவு ஊட்டச் சத்துத் தேவைகளையேனும்நிறைவு செய்யும் முறையிலும், உணவுத் தானிய விலைவாசிகளை நியாயமான வரையறைகளுக்குள் கட்டுப்படுத்த வேண்டுமென்கிற நமது குறிக்கோள் நிறைவேறும் வகையிலும் மேலும் உற்பத்தியைப் பெருக்கியே ஆகவேண்டும்.

திட்ட இறுதிக்குள் உயரிய உற்பத்தி இலங்குகளை அடைவதைவிட, விரைந்து பலன் தரும் திட்டங்களில் அதிக நாட்டம் செலுத்தி ஆர்வத்தோடு உற்பத்தியைக் கணிசமாக நடப்பு ஆண்டில் உயர்த்துவதே இன்றியமையாததாகும். இந்த ஆண்டில் வேளாண்மை உற்பத்தி எந்த அளவில் குவிந்து—உயர்ந்து நிற்கிறதோ அதையொட்டியே நான்காம் திட்டத்தின் வெற்றி அமையும்.

மிகுபயன் தரும் (High Yielding) விதைகளைப் பயன்படுத்தும் நிலப்பரப்பை எவ்வளவு விரிவாக்க முடியுமோ அவ்வளவு விரிவாக்கி, உற்பத்தி அளவைப் பெருக்குவதே நடப்பு ஆண்டில் நமது வேளாண்மைத் திட்டத்தின் சிறப்புக் கூருக அமையும்.

நமது மாநிலத்தில் 13·5 இலட்சம் ஏக்கர் நிலங்களில் ADT-27 நெல் ரகத்தைப் பயிரிடுவதோடு CO-25, CO-29 நெல் ரகங்கள்—கலப்பினச் சோளம் CSH-I—கலப்பினக் கம்பு HB-1 போன்ற புதிய ரகங்கள் அதிக நிலப்பரப்பில் பயிரிடப்படும்.

மொத்தத்தில், மிகுபயன் தரும் புதிய வித்துக்களைக்கொண்டு பயிரிடும் திட்டம் 17·4 இலட்சம் ஏக்கர் நிலங்களில் நிறைவேற்றப்படும்.

கடந்த ஆண்டில் இத்தகைய புதிய ரகங்களைக்கொண்டு பயிரிடப்பட்ட நிலப்பரப்பு 5.27 இலட்சம் ஏக்கர் என்பதைக் காணும்போது, இந்த ஆண்டு இந்த அரசு எந்த அளவுக்கு இதிலே முன்னேற்றம் பெறத் திட்டமிடுகிறது என்பதை உணரலாம்.

தஞ்சாவூர் மாவட்டத்தில், 'பயிர் முறை'யில் (Cropping Pattern) அரசு செய்யக் கருதியுள்ள மாற்றத்தின் காரணமாக, மிகு பயன் தரும் விதைகளைக் கொண்டு பல இலட்சம் ஏக்கர் பரப்பில் பயிரிட முடியும்.

வழக்கமாகத் தஞ்சாவூர் மாவட்டத்தில் 3.2 இலட்சம் ஏக்கர் நிலப் பரப்பில் மட்டுமே குறுவைப் பயிர் சாகுபடி செய்யப்படுகின்றது. அதையடுத்து, இரண்டாவது பயிராக தாளடிப் பயிர் விளைவிக்கப்படுகிறது. பாசன வசதியுள்ள எஞ்சிய 9 இலட்சம் ஏக்கருக்கும் மேற்பட்ட நிலப்பரப்பில், சம்பாப் பயிர் ஒரு போகமே பயிரிடப்படுகிறது.

இப்போது நிறைவேற்றக்கூடியது என நாம் கருதும் புதிய பயிர் முறையின்படி சுமார் 3.2 இலட்சம் ஏக்கர் பரப்பில் குறுவைப் பயிரும், அதையடுத்து தாளடிப் பயிரும் வழக்கம்போல் விளைவிக்கப்படும்.

வழக்கமான சம்பாப் பயிர் விளையும் 9 இலட்சம் ஏக்கர் பரப்பில் 3 இலட்சம் ஏக்கர் தொடர்ந்து ஒரு போக நிலமாகவே இருந்து வரும்.

ஏனைய 6 இலட்சம் ஏக்கர் பரப்பில் ADT-27 நெற்பயிர், முதற் பயிராக விளைவிக்கப்படும்.

இதை அறுவடை செய்த பின்னர், ASD-5, CO-32 நெல் ரகங்கள் 4 இலட்சம் ஏக்கர் பரப்பில் இரண்டாவது பயிராகப் பயிரிடப்படும்.

காவிரிக் கழிமுகத்தில் பயிர் முறையில் செய்யக் கருதியுள்ள இம்மாறுதல், இப்போது ஒரு போகம் மட்டுமே விளைவிக்கப்படும் நிலங்களில் இருபோகப் பயிர்களை விளைவிக்க நாம் எடுத்துக்கொள்ளும் முயற்சியின் முடிமணியாக அமைந்து நமது உணவு உற்பத்தித் துறையில் புதியதோர் ஒளித் திருப்பத்தை உண்டாக்கும்என்பதில், மிகைப்படக்கூறல் எதுவுமில்லை.

புதிய பயிர் முறைகளில் மென்மேலும் உற்சாகம் காட்டிவரும் தஞ்சை மாவட்ட உழவர் பெருமக்கள், இந்தத் திட்டத்தை வெற்றியோடு செயல்படுத்துவதற்குத் தேவையான எல்லா முயற்சிகளையும் மேற்கொள்வார்கள் என்பதிலும் அரசுக்குச் சிறிதும் ஐயமில்லை; இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதில் உழவர்கட்கு முழு ஒத்துழைப்பு நல்கும் வண்ணம், நமது வேளாண்மை வளர்ச்சிப் பணியாளர்களையும் ஆயத்தப்படுத்தி வருகிறோம்.

—தமிழக அரசின் நிதிநிலை அறிக்கையில்

## உணவு இறக்குமதி பாதிப்பு

### சூயஸ் நெருக்கடியின் விளைவு

புதுடில்லி, சூன் 20—

"இந்தியாவுக்கு 10.7 இலட்சம் டன் உணவு சூன் மாதத்தில் இறக்குமதியாகும் என்று எதிர்பார்க்கப்பட்டது; சூயஸ் நெருக்கடியால் இறக்குமதி 7.2 இலட்சம் டன்னுகக் குறைந்துவிட்டது"

என்று மத்திய உணவுத் துறை உதவி அமைச்சர் ஷிண்டே, மக்களவையில் கூறினர். அவர் மேலும் தெரிவித்ததாவது:—

"மாநில அரசுகளுக்கு மத்திய அரசு உணவு பகிர்ந்தளிப்பதாக ஒப்புக்கொண்டது 8.5 இலட்சம் டன் உணவு ஆகும்."

## அண்ணுவின் பட்ஜெட்---[3]

# சமுதாய ஒளி!

அரசியலையும் பொருளாதாரத்தையும் சமுதாய இயலினின்றும் தனித்த துறைகளாகச் சொல்வது பழைய முறை!

அமெரிக்கக் கல்வி முறையைக் கவனித்தவர்களும், பின்பற்றுபவர்களும், இதில் ஒரு மாற்றத்தைத் தோற்றுவித்தார்கள்!

'அரசியல்—பொருளாதார—மற்றைய சமுதாய இயல்' என்று முதல் இரண்டு நூல்களையும் மூன்ருவதன் உள்ளடக்கமாகக் கூறி விளக்குவது இப்போது பிரபலமாகிவரும் முறையாக இருக்கிறது!

அரசியலையும் பொருளாதாரத்தையும் சமுதாய இயலினின்றும் தனித்து நோக்கி அல்லது அணுகிப் பயனில்லை!

அரசியலோ பொருளாதாரமோ, கடைசியில் சமுதாயத்துக்காகத்தான் இருக்கிறது!

எனவே, அரசியலை அரசியலுக்கென்றும், பொருளாதாரத்தைப் பொருளாதாரத்துக்கென்றும் தத்துவ அடிப்படையில் இறுக்கமாகப் பின்பற்றுவது, கல்வியாளர்களுக்குத்தான் பயன்படுமே தவிர, ஆட்சியாளர்களுக்குப் பிரயோசனப்படாது!

வரவு-செலவுத் திட்டங்கள், 'ஏதோ, அன்றாட நிர்வாக முறைகளுக்காக மட்டுமே' என்று மக்கள் கருதும் வகையில் அரசுகள், ஆண்டு நிதி நிலை அறிக்கைகளை வெளியிடுவது, தேவைகளும் குறைபாடுகளும் ஒரு சிறிதும் இல்லாத நாடுகளில் வேண்டுமானுல் இருக்கலாம்!

தமிழகத்தில் தோன்றிய அரசியல் மாற்றமே, 'பட்ஜெட் எப்போது' என்ற ஆவலினை, எல்லாத் தரப்பிலும் ஏற்படுத்தியது!

'அண்ணுவின் பட்ஜெட்' என்ற சிறப்பான பெயரை நிலையாக ஏற்படுத்தும் வகையில், தமிழக அரசின் சார்பாக கழக அமைச்சரவை வெளியிட்டுள்ள நிதி நிலை அறிக்கை, சமுதாயத்தில் புதியதோர் ஒளியையே கொடுத்திருக்கிறது!

அரசியல் மாற்றமும், பொருளாதாரப் புள்ளி விவரங்களும் மட்டும் சமுதாயத்தில் புதிய உணர்வுகளைத் தோற்றுவித்துவிடாது. சமுதாய மாற்றத்துக்கு சட்டபூர்வமான ஊக்கம்—பாதுகாப்பு முதலியவைகளைக் கொடுப்பதன் மூலம்தான் நிலையான பலனைப் பெறலாம்.

இதனை உறுதிப்படுத்தும்வகையில்தான்,

"இந்த அரசு, எந்தக் கொள்கைகளை மக்கள்முன் வைத்து இம்மாநில ஆட்சியினை ஏற்று நடத்தும் பொறுப்பை மேற்கொண்டதோ அக்கொள்கைகளை—எத்தகைய வரைமுறைகள் இருப்பினும்—உளமாரச் செயல்படுத்த வேண்டுமென்பதுதான் இந்த அரசின் உறுதியான நம்பிக்கை"

என்ற முன்னுரையுடன் நிதி நிலை அறிக்கையைத் தந்திருக்கிறர் முதலமைச்சர் அண்ணு

நிதி நிலை அறிக்கைகளில் கல்விக்காகவும், இராணுவத்துக்காகவும் ஒதுக்கப்படும் தொகைகளை வைத்து, மத்திய—மாநில அரசுகளின் நிலைகளைப் பெரும் அளவில் புரிந்துகொள்ளலாம்.

மொத்த வரவு இனங்களில் கால் பகுதிக்குமேல் கல்விக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் தமிழக நிதி நிலை அறிக்கை, மக்களின் அறிவுக் கண்களைத் திறக்கும் பணியில் அரசு எந்த அளவுக்கு நாட்டம் கொண்டிருக்கிறது என்பதனைத் தெளிவுபடுத்துகிறது.

ரூ. 217.19 கோடி செலவு இனங்களைக் கொண்ட பட்ஜெட்டில், ரூ. 55 கோடி கல்விக்கென ஒதுக்கப்பட்டிருக்கிறது.

1952—54-ம் ஆண்டுக் காலத்தில், ரூ. 9 கோடியாக மட்டுமே இருந்த கல்விச் செலவினங்கள், 15 ஆண்டுக் காலங்களில் ஆறு மடங்கு அதிகரித்திருக்கிறது.

கல்விக்காக ஒதுக்கப்படும் எவ்வளவு பெரிய தொகையும் உடனடி பலனைக் கொடுக்காது என்பது உண்மைதான்.

துண்டு விழும் பட்ஜெட் என்றுலும்—குறைந்த விலையில் அரிசி வழங்கவேண்டிய அவசியம் இருந்தது என்றுலும், ரூ. 50 கோடி ஒதுக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில்—அண்ணு அவர்கள், நிதி நிலை அறிக்கையில் ரூ. 55 கோடி ஒதுக்கியிருப்பது, அரசியல் வரம்புகளைக் கடந்து பாராட்டப்படவேண்டிய ஒன்ருகும்.

"கல்வி வசதிபெற சாதி ஒரு தடைக்கல்லாக இருக்கக்கூடாது" என்ற சீர்திருத்தக் கருத்து அண்ணுவின் பட்ஜெட்டில் மேலும் மெருகு பெற்றிருக்கிறது!

பொருளாதார நிலையில் பின்னடைந்து இருப்பவர்களுக்கு, 'மேல் இனப் பிறப்பு' என்றதோர் நிலை கல்வியறிவைப் பெறுவதற்குத் தடையாக இருந்துவந்ததை மாற்றி, 'ரூ. 1,500-க்குக் குறைந்த வருமானமுள்ள எல்லாப் பெற்றோர்களின் பிள்ளைகளும், புகுமுக வகுப்புவரை இலவச கல்வி பெறலாம்' என்று அறிவித்திருப்பது, குறிப்பிடத்தகுந்ததாகும்,

"நாங்கள், வருமான வரம்பும் இல்லாமல் எல்லா மாணவர்களுக்குமே இந்தச் சலுகையைத் தருவதாக இருந்தோமே" என்று காங்கிரசுக்காரர்கள் கூறலாம்.

"ரூ. 1,500-க்குக்கீழ் வருமானமுள்ள குடும்பத்துப் பிள்ளைகளுக்கு மட்டும் கல்லூரிகளில் புகுமுக வகுப்புக் கல்வி வசதி" என்று கூறியிருப்பதனை, 'மாநில அரசின் நிதித் தட்டுப்பாட்டுக்குத் தகுந்தாற்போல் செய்துள்ளதோர் ஏற்பாடு' என்று குறைத்து மதிப்பிட வேண்டியதில்லை!

ஏற்றத்தாழ்வு, சாதி பாகுபாட்டில் மட்டுமல்ல—பொருளாதார நிலையிலும் இருக்கும். நிலையை மற்ருெரு கோணத்திலிருந்து மாற்றி சமுதாயச் சீர்திருத்தம் காண முயலும் நடவடிக்கையாக இதனைக் கொள்ளவேண்டும்.

'உயர்ந்த சாதிப் பிறப்பு' என்ற ஒரே முத்திரை, ஏழ்மையில் உழலும் தங்களுக்குக் கல்வி வசதி பெறுவதில் எவ்வளவு பெரிய தடைக்கல்லாக இருக்கிறது என்று மனங்குமுறிய பலர், இந்த அறிவிப்பினை, மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றனர்!

இதேமுறையில் பின்தங்கிய வகுப்பினர் ஏற்கனவே பெற்றுவரும் உபகாரச் சம்பளத்தினை ரூ. 1,500-லிருந்து ரூ. 2,000-க்கு உயர்த்தியிருப்பது, பின்தங்கிய வகுப்புகளிலும் மாத ஊதியம் பெறும் குடும்பத்தாருக்குப் புதிய வாய்ப்புக்களைக் கொடுத்திருக்கிறது!

கலப்புத் திருமணத்துக்குச் சட்டப்பூர்வமான பாதுகாப்புக் கொடுப்பதுடன் நின்றுவிடாமல், மக்களிடையே இந்தச் சீர்திருத்தக் கருத்து புதிய தகுதியினைப் பெறவேண்டுமென்ற எண்ணத்தில், கலப்புத் திருமணம் செய்துகொள்வோருக்கு அரசு, பாராட்டும் பதக்கமும் அளிக்க முன்வந்திருப்பது, காலாகாலமாக சுயமரியாதை இயக்கம் காட்டிவந்த தியாகத்துக்கும், உழைப்புக்கும் கொடுத்துள்ள விலைமதிப்பில்லாத பரிசாகும்!

புதிய பொறுப்புக்களின் முதற் படி—நிதி நெருக்கடி ஆகிய எதுவும் மேற்கண்ட சட்டபூர்வமான நடவடிக்கைகளுக்குத் தடையாக இல்லாமல் முதல் நிதி நிலை அறிக்கையிலேயே இடம் பெற்றிருப்பது, அண்ணு அவர்கள், கழக அமைச்சரவையின் மூலம் மேன்மேலும் ஏற்படுத்த இருக்கின்ற சமுதாய ஒளிக்கு ஒரு முறையான முன்னறிவிப்பாக இருக்கிறது!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராகச் சென்று—புதுடில்லி மாநிலங்கள் அவையில் நின்று—'நான் ஏழை மக்களின் பிரதிநிதி' என்று தன்னைத்தானே அறிமுகப்படுத்திய தனை அண்ணு அவர்கள், 'எல்லா வகையிலும் செயல்படுத்திவிட்டார்' என்பதனை முதல் நிதி நிலை அறிக்கை, தெளிவாக மெய்ப்பிக்கிறது!

—எஸ். ஆர்.

## நீட்டலளவைகள்--மக்களுக்கு வேண்டுகோள்

சென்னை, சூன் —

1958-ம் ஆண்டு சென்னை எடைகள், அளவைகள் (அமுல்) சட்டப்படி, மெட்ரிக் நீட்டலளவைகள் 1962 அக்டோபர் முதல் நாளிலிருந்து கட்டாய அமுலுக்கு வந்துள்ளன.

1965 அக்டோபர் முதல் நாளிலிருந்து இவை நிலப்பரப்பு சம்பந்தமாகவும் அமுலாக்கப்பட்டுள்ளன.

இந்த நாட்களிலிருந்து மெட்ரிக் அளவுகளைத்தான் சட்டப்படி பயன்படுத்த வேண்டும்.

பொதுமக்களின் வசதிக்காக, மெட்ரிக் அளவுகளைப் பழைய அளவுகளாகவும், பழைய அளவுகளை மெட்ரிக் அளவுகளாகவும் மாற்றும் அட்டவணை கீழே கொடுக்கப்பட்டுள்ளது. பொது மக்கள் தங்கள் அலுவல்களில் மெட்ரிக் அளவுகளையே பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

| | | |
|---|---|---|
| நீட்டலளவை | | |
| 1 மீட்டர் | = | 3.28 அடி |
| 1 அடி | = | 304.8 மில்லி மீட்டர் |
| பரப்பளவு | | |
| 1 ஏர் | = | 100 சதுர மீட்டர் |
| 1 ஹெக்டேர் அல்லது 100 ஏர் | = | 1,076.4 சதுர அடி |
| 1 ஏக்கர் | = | 40.5 ஏர் (சுமாராக) |
| 2,000 சதுர அடி கொண்ட ஒரு கிரவுண்டு | = | 2.23 ஏர் |

தமிழக அரசுக்கு முஸ்லிம் பெருமக்கள் நன்றி

# 'ஒடுக்கப்பட வேண்டியவர்கள்' எனக் கருதப்பட்டவர்கள் நீதி பெற்றனர்

## இருபதாண்டுக்கால காங்கிரசு ஆட்சி செய்யாததை இன்று கழக ஆட்சி செய்ததற்குப் பெருமிதம்

### நபிகள் நாயகம் பிறந்த நாள் விழாவில் அமைச்சர் சாதிக் பாட்சா உரை

சென்னை, சூன் 21—

"இருபதாண்டுக்கால காங்கிரசு ஆட்சியில் முஸ்லிம் மக்கள், சந்தேகக் கண்கொண்டு பார்க்கப்பட்டார்கள்; அடக்கி ஒடுக்கப்படவேண்டியவர்களாகக் கருதப்பட்டார்கள்; வாக்காளர்' என்ற எண்ணிக்கைக்கு மட்டுமே அவர்கள் பயன்பட்டார்கள்!

"மகாராட்டிரத்தில், 'மைனரிடி சமூகத்தின் உரிமை பறிக்கப்படுகிறது' எனக் குரல் எழுப்பப்படுகிறது; ஆனால் தமிழகத்தில்—அறிஞர் அண்ணா அவர்களின் ஆட்சியில்—முஸ்லிம் சமுதாய மக்கள் நீதி பெறுகிறார்கள்!

"கடந்த பல ஆண்டுகளாக ஆட்சியிலிருந்த காங்கிரசு செய்யாததை, இன்று ஆட்சியிலுள்ள தி. மு. கழக அரசு—அண்ணா அவர்களின் ஆணையின் பேரில்—செய்திருக்கிறது; நபிகள் நாயகத்தின் பிறந்த நாளை, 'விடுமுறை நாள்' என அறிவித்திருக்கிறது"

என்று, மெரினா கடற்கரையில் நடைபெற்ற நபிகள் நாயகம் பிறந்த நாள் விழாவில் பேசுகையில், சுகாதாரத் துறை அமைச்சர் சாதிக் பாட்சா சுட்டிக்காட்டி விளக்கினார்.

விழாவிற்கு, முஸ்லிம் லீக் தலைவர் காயிதே மில்லத் முகமது இஸ்மாயில் தலைமைதாங்கினார்.

விழாவில், கே. எம். மேதா எம்.எல்.ஏ., பீர்முகம்மது எம்.எல்.ஏ., ஏ. கே. ஏ. அப்துல் சமது எம்.பி., எஸ். எம். ஷெரீப் எம்.பி., முகம்மது ரசாகான் ஆகியோரும் பேசினர்.

## கொடுமைகள் தீர்ந்தனவா?

காயிதே மில்லத் முகமது இஸ்மாயில் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"மக்களைப் பிடித்துள்ள வியாதிகளில் இன இறுமாப்பும், சாதி வேறுபாடும் மிகக் கொடுமையானவை!

எத்தனை ஆயிரம் ஆண்டுகளாக இவை நீடித்திருக்கின்றன என்பதை அறுதியிட்டுக் கூற இயலாது.

இக்கொடுமையிலிருந்து நிவாரணம் கிடைக்கச் செய்வதற்காகவே சட்டங்களை உருவாக்கியுள்ளனர்!

எந்தக் கொடுமைகளால் மக்கள், நசிந்தும் கசிந்தும் வாடுகிறார்களோ, அந்த மக்களின் வாட்டமும் ஆவலாதிகளும் இச்சட்டங்களால் தீர்ந்துவிட்டதாகச் சொல்லமுடியாது!

போர்க் கொடுமைக்கு ஆளான பல இலட்சக்கணக்கான மக்கள், இருக்க வீடின்றி—உடுக்க உடையின்றி, மரமோ புல்லோ விளையாத வனாந்தரங்களில் பரதவித்துக் கொண்டிருக்கிறார்கள்; அவர்களுக்கு உலகத்தார் உதவுவதற்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. இத்தகைய முயற்சிகளில் நாமும் பங்கேற்று, நமது கடமையைச் செய்வோம்.

உலகில் புதிய சகாப்தத்தை—நாகரிகத்தைத் தோற்றுவித்த நபிகள் நாயகம் தோன்றிய நாளான இந்நாளைத் தமிழக அரசு, பொதுவிடுமுறை நாளாக அறிவித்திருப்பது கண்டு மக்கள் மகிழ்ச்சியடைகிறார்கள் — நன்றி தெரிவிக்கிறார்கள்!

முஸ்லிம் பெருமக்கள் சார்பிலும், என் சார்பிலும் தமிழக அரசுக்கு நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்."

## சிறுபான்மையினர் உரிமையை மதிக்கிறது தி. மு. கழக அரசு

பெரியகுளம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கே. எம். மேதா பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"நபிகள் நாயகம் பிறந்த நாளின் பெருமையை உணர்ந்து, இந்த நாளை, விடுமுறை நாளாக அறிஞர் அண்ணா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இந்த விடுமுறை, சிறுபான்மையினருக்குத் தரப்பட்ட உரிமை-சிறுபான்மையினர் உரிமையை மதிக்கும் செயல்!

'திராவிட முன்னேற்றக் கழகம், சாதிபேதமற்ற முறையிலே ஆளுகிறது' என்பதற்கு இது ஓர் உதாரணமாகும்."

## ஒன்பது ஆண்டுகளாக வசூலிக்காத வரி பாக்கிகள்

### புகார்களை மறுக்கிறார் மொரார்ஜி தேசாய்

"கடந்த ஒன்பது ஆண்டுகளாகக் கோடிக்கணக்கான ரூபாய் வரி பாக்கிகளை வசூலிக்காமல், ஒரிசாவின் முன்னாள் முதலமைச்சர் பிஜு பட்நாய்க்குக்கு மத்திய அரசு பாதுகாப்பு அளித்திருக்கிறது"

என்றுமாநிலங்களவையில், எதிர்க்கட்சியினரால் கூறப்பட்ட புகார்களை நிதியமைச்சர் மொரார்ஜி தேசாய் மறுத்திருக்கிறார்.

"வருமான வரி பாக்கிகளை சூன் திங்கள்இறுதிக்குள் செலுத்திவிட வேண்டுமென்று வருமான வரி இலாகா, அவருக்கு உத்தரவிட்டிருக்கிறது. அப்படி அவர் செலுத்தாவிட்டால், 'வரி வசூலை நிறுத்தி வைக்க வேண்டும்' என்ற அவருடைய அப்பீல் மனு, விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது"

என்று வேறு மொரார்ஜி தேசாய் கூறியிருக்கிறார்.

# அவதியுறும் மக்களுக்கு இனி ஆறுதல் கிடைக்கும்

கட்டுப்பாட்டுக் கடைகளின் வாயிலாக உணவுத் தானியங்கள் வழங்குவதை உறுதிப்படுத்தியதால், உணவுத் தானிய விலைகளைக் கணிசமாய்க் குறைப்பதற்கான அடுத்த முக்கிய நடவடிக்கையை அரசு மேற்கொள்ள முடிந்தது.

உணவுத் தானிய உற்பத்தியாளர்களுக்குக் கொடுக்கவேண்டிய விலைகளைக் குறைக்காமல், இயன்ற விரைவில் ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி போடுவதாக நாங்கள் அளித்த வாக்குறுதியை, அரசு நிறைவேற்றவேண்டுமெனக் கடந்த கூட்டத் தொடரிலேயே நான் குறிப்பிட்டிருந்தேன்.

இக்கூற்றை வாய்மையாக்கும் வகையில், சட்டபூர்வமான பங்கீட்டுப் பகுதிகளான சென்னையிலும், கோவையிலும் பட்டணம் படி அரிசி ஒரு ரூபாய்க்கு வழங்கத் தொடங்கியுள்ளோம். முப்பத்தொரு இலட்சம் மக்கள், இப்போது இத்திட்டத்தினால் பலன் துய்க்கின்றனர்.

இத்திட்டம், உணவுத் தானிய வழங்கல் பொறுப்பினை அரசு மேற்கொண்டுள்ள பிற பகுதிகளுக்கும், உணவுத் தானிய இருப்புக்களைப் பொறுத்தும்—வெளிச் சந்தையில் விலைவாசிகளின் போக்கினை ஒட்டியும் படிப்படியாக நீடிக்கப்படும்.

நடப்பு ஆண்டில் இத்திட்டத்தின் காரணமாக ஏற்படும் நிதிப் பொறுப்பு ரூ. 5 கோடி அளவில் இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. இதற்கிணங்க '124 அரசு வாணிகம்' என்கிற தலைப்பில் நிதி ஒதுக்கம் வேண்டப்பட்டுள்ளது.

அரசு உணவுத் தானிய இரும்புகளை வாங்கும் விலைகளும், அவற்றை அரைத்தல் போன்ற ஏனைய செலவுகளும், உணவுத் தானிய இருப்புக்களைப் பற்பல நிலைகளில் கையாளுவதற்காகும் செலவுகளும் சேர்ந்த அடக்க விலைக்கும், பட்டணம் படி ஒரு ரூபாயென மக்களுக்கு வழங்கும் விலைக்கும் உள்ள வேறுபாட்டினை, 'உணவுத் தானியங்களில் அரசு வாணிபம்' என்கிற தலைப்பின்கீழ் நிகர செலவாகக் காட்டப்பட்டு, பின்னால் வருமானக் கணக்கில் பற்றுக எழுதப்படும்.

உணவுத் தானியங்களைப் பற்பல நிலைகளில் கையாளுவதற்கென இப்போது அனுமதிக்கப்படும் செலவுகள் குறித்து ஆய்வு செய்வதன் மூலம், இதற்கென வழங்கப்பெறும் உதவித் தொகையின் சுமையை ஓரளவுக்குக் குறைக்க முடியுமென்றும் அரசு நம்புகிறது.

சலுகை விலைகளில் உணவுத் தானியங்களை வழங்குவதால், நீண்ட காலமாக விலைவாசி உயர்வுச் சுமையால் அவதியுறும் பெரும்பாலான மக்களுக்கும் ஆறுதல் கிட்டும்; மேலும், மற்றேதும் இடையில் நிகழாமலிருப்பின், ஏனைய பொருள்களின் விலைவாசிகளும் பணிச் செலவுகளும் உயராமல் தடுக்கவும் இது உதவியாயிருக்கும்.

## இந்திய அரசின் கொள்கை நியாயமானதுதானா?

இவ்வாறு உதவித் தொகைகள் வழங்குவதால் பலனடைகிற மக்கட் பிரிவினரில், விலைவாசி உயர்வுக்கேற்ப அடிக்கடி ஈட்டுத் தொகைகள் வழங்கவேண்டிவந்த மாநில-மத்திய அரசு ஊழியர்களும் அடங்குவர்.

எனவே, வாழ்க்கைச் செலவு உயர்வதைத் தடுப்பதில் முனைந்துள்ள இந்திய அரசு, உணவிற்காக உதவித் தொகைகள் வழங்குவது குறித்து மாநிலங்களுக்கு உதவியளிக்க மறுத்து நிற்பது வருந்தத்தக்கதாகும்.

ஆனால் இதே மத்திய அரசு, இறக்குமதியாகும் உணவுத் தானியங்களை நம்பியுள்ள சில மாநிலங்களுக்கு மட்டுமே குறிப்பிடத்தக்க அளவிற்குப் பயனளிக்கும் முறையில், நடப்பு ஆண்டில் இறக்குமதி செய்யப்பட்ட உணவுத் தானியங்களுக்கு ரூ. 118 கோடி அளவிற்கு உதவித் தொகை வழங்கிவருவதை எண்ணும்போது, 'உதவித் தொகை பற்றிய இந்திய அரசின் கொள்கை நியாயமானதுதானா' என எவரும் கேட்பது இயற்கையே.

ஒருபால் கோடாது, பற்பல மாநிலங்களுக்கு இடையே சம நிலையில் சலுகைகள் வழங்கவேண்டிய அவசியத்தைக் கருதியாவது, மத்திய அரசு, உணவுத் தானியக் கொள்முதல் விலைகளுக்கும்—அவற்றின் விற்பனை விலைகளுக்கும் இடையேயுள்ள வேறுபாட்டினை, உதவித் தொகையாக வழங்கும் மாநிலங்களுக்கு ஓரளவுக்கு உதவியளிக்க முன்வந்திருக்க வேண்டும்.

—தமிழக அரசின் 1967–68-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில்

நாட்டின் நலிவு நீங்க நல்லுரை கூறிடும் மத்திய அரசு

விந்தை நிரம்பிய வேதனையை மாநில அரசுக்குத் தருகிறது!

# உரிய காலத்தில் உர வகைகள் வழங்க மத்திய அரசு முன்வர வேண்டும்

மாநில அரசு—மிகுந்த அக்கறையுடன் திறமைமிக்க அதிகாரிகள் தீட்டித் தரும் திட்டத்தின் மூலம் உணவு உற்பத்தியை நாம் விரும்பும் அளவுக்குப் பெருக்க முனையும்போது, அத்திட்டத்தின் வெற்றிக்கு இன்றியமையாத இரசாயன உரம் வழங்குவதில், மத்திய அரசு முழு அளவு ஒத்துழைக்க வேண்டியது தேவையாகும்.

ஆனால், இரசாயன உர வகைகள் வழங்குவதில் ஏற்பட்டுள்ள கடும் பற்றுக்குறைதான் பெருந்தடையாக இருந்து வந்துள்ளது. மத்திய அரசு நமது மாநில அரசின் தேவை அளவு அறிந்து உரம் ஒதுக்குவதில்லை. ஒதுக்கிய அளவு முழுவதையும் கூடத் தருவதில்லை என்பதை பேரவையினர் நன்கு அறிவர்.

1964—65-ல், நைட்ரஜன் உர வகைகள் 95 ஆயிரம் டன் நமக்குத் தேவைப்பட்டிருக்க (அல்லது அம்மோனியம் சல்பேட் உர வகைகள் 4.95 இலட்சம் டன் நமக்குத் தேவைப்பட்டிருக்க), 70 ஆயிரம் டன் நைட்ரஜன் உரங்களை மட்டுமே (அல்லது 3.5 இலட்சம் டன் அமோனியம் சல்பேட் உரங்களை மட்டுமே) நாம் பெற்றோம்.

மீண்டும் 1965—66-ல், 1.16 இலட்சம் டன் நைட்ரஜன் (அல்லது 5.80 இலட்சம் டன் அமோனியம் சல்பேட்) உர வகைகள் நமக்கு வேண்டிய அளவு என்று மதிப்பிட்டதற்கு மாறாக, 55 ஆயிரம் டன் நைட்ரஜன் (அல்லது 2.75 இலட்சம் டன் அம்மோனியம் சல்பேட்) உர வகைகளை மட்டுமே நாம் பெற முடிந்தது.

1966—67-ல் நமது நைட்ரஜன் உரத் தேவை 1.35 இலட்சம் டன் (அல்லது 6.75 இலட்சம் டன் அம்மோனியம் சல்பேட்) அளவில் இருக்க, 72 ஆயிரம் டன் நைட்ரஜன் (அல்லது 3.6 இலட்சம் டன் அம்மோனியம் சல்பேட்) உர வகைகள் மட்டுமே நமக்கு ஒதுக்கப்பட்டன.

நடப்பு ஆண்டில் 1.63 இலட்சம் டன் நைட்ரஜன் உரங்களேனும் அல்லது 8.15 இலட்சம் டன் அம்மோனியம் சல்பேட் உரங்களேனும் நமக்குத் தேவைப்படும். இதற்கு எதிராக 83 ஆயிரம் டன் நைட்ரஜன் உரங்கள் மட்டுமே அல்லது 4.10 இலட்சம் டன் அமோனியம் சல்பேட் உரங்கள் மட்டுமே இந்திய அரசு ஒதுக்கக் கருதியுள்ளது; அதாவது, நமது உரத் தேவையில் ஏறக்குறைய பாதி அளவுக்கே வழங்குவதாக மத்திய அரசு கூறியுள்ளது.

'நாட்டின் நலிவு போக்க ஒரே வழி உணவு உற்பத்திப் பெருக்கமே' என்ற நல்லுரையைக் கூறிடும் மத்திய அரசு, அதற்கான திட்டத்தை மாநில அரசு முனைந்து மேற்கொள்ளும்போது, உரம் வழங்குவதில் இப்போக்கினில் இருப்பது காண, விந்தை நிரம்பிய வேதனை அடைகின்றோம்.

இவ்வாறு, பெரிதும் தேவைப்படுகிற உர வகைகளில் எஞ்சிய அளவையும் நாம் பெறுவோமென்ற நம்பிக்கையின்மீதே நமது திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

மிகு பயன் வித்துக்கள் திட்டத்தை—உர வகைகள் வழங்குவதன் மூலம்—முற்றிலும் ஆதரிப்பதாக இந்திய அரசு நமக்கு உறுதியளித்துள்ளது. எனினும், நமக்குத் தேவைப்படும் உரங்கள் முழுவதையுமோ, அல்லது ஏறத்தாழ அதற்கு நிகராகவோ உள்ள அளவிற்கு வழங்கும் வகையிலோ நமக்கு உறுதியளிக்க வேண்டுமென்று விழைகிறோம்.

நமது மாநில உழவர் பெருமக்கள் முற்போக்கு எண்ணமுடையவர்கள்; தூண்டாமணி விளக்குப் போன்றவர்கள்; ஆதலால், உர வகைகளை இன்னும் அதிக அளவில் பயன்படுத்துமாறு அவர்களைத் தூண்டுவதற்கு சிறப்பான முயற்சிகள் எதையும் மேற்கொள்ள வேண்டிய தேவையில்லை.

முனைப்பான பயிர் விளைச்சல் திட்டங்கள் இனிதே நிறைவேறும் வகையில், உரிய காலத்தில் போதிய அளவுக்கு உர வகைகளை வழங்கவேண்டிய இன்றியமையாத் தேவையை உணர்ந்து, நமது வேண்டுகோளுக்கு மத்திய அரசு முற்றிலும் செவிசாய்க்குமென நம்புகிறோம்.

—தமிழக அரசின் நிதி நிலை அறிக்கையில்

# சட்டமன்றத்தில்...!

[போகாத நிருபர்]

நிதி நிலை அறிக்கை மீதான மூன்றும் நாள் விவாதத்தில், கேள்வி நேரம், 'கொடுக்கல்—வாங்கல்' மிக்கதாக இருந்திருக்கிறது! பதில்கள் மட்டுமல்லாது உறுப்பினர்களின் பல கேள்விகளும்கூட, பயனுள்ளவையாக இருந்திருக்கின்றன!

பொதுத் தேர்தல் பற்றிய கேள்விகள், 'முறையான புதிய தொடர் கூட்டம்' என்ற வகையில், இத்தடவை எதிர்பார்க்கப்பட்டதுதான்; ஆனல், அத்துணைபேருடைய கேள்விகளிலும் காணப்பட்ட ஆர்வம்—சூடு ஆகிய அனைத்தும், முதலமைச்சர் அண்ணுவின் பெருந்தன்மையும் கண்ணியமும்மிக்க பதில்களினுல் அமைதிப்படுத்தப்பட்டிருக்கின்றன!

தேர்தல் அரசியலைப் பற்றியே பெரும் பகுதி கேள்விகள் இருந்த நிலையிலும், புதன்கிழமையன்று கேள்வி நேரத்தில் அண்ணுவின் பதில்கள், 'தவிர்க்கமுடியாத சூடு' சிறிதுகூட இல்லாமல், வியக்கத்தக்க 'ஒளி'யினை வழங்கியிருக்கிறது!

**"என்மீது சிலர் கல்லெறிந்தார்கள்; சிலர் மாலையும் போட்டார்கள்; என்னைப் பொறுத்தவரையில், நான், இரண்டையும் ஒன்ருகவே மதிக்கிறேன்"**

**என்று அண்ணு அவர்கள், கேள்வி ஒன்றுக்குத் தந்துள்ள பதில், குற்றமுள்ள நெஞ்சினரை நிச்சயம் கோல்லாமல் கோன்றிருக்கும்!**

எதிர்க் கட்சியாக இருந்தபோது ஏற்ற துன்பங்கள்—தொல்லைகள்—அடக்குமுறைகள் ஆகியவற்றினைக் கருத்தில் வைத்து, 'கழகம் ஆட்சிக்கு வந்ததும் பழிவாங்கும் மனப்பான்மையைப் பெற்றுவிடுமோ' என்று தவருகக்கூடச் சந்தேகித்தவர்கள் நாணித் தலைகுனியும் வகையில் தேர்தல் கலவரங்கள் பற்றிக் கேட்ட சில கேள்விகளுக்கு,

"தேர்தலுக்குச் சில தினங்களுக்கு முன்பு தி. மு. க. ஊழியர்கள் கைதுசெய்யப்பட்டார்கள் என்று உறுப்பினர் (ஹாண்டே) கூறியது உண்மை என்பதை—நான் வெளியிட்ட புள்ளிவிவரத்தில், 'தி. மு. க.-வினரே அதிகம்' என்பதிலிருந்து—தெரிந்துகொள்ளலாம்; **இனி எதிர்காலத்தில் அப்படிப்பட்ட ஒரு நிகழ்ச்சி நடைபெருது.**

"இப்படிக் கைது செய்ததன் உள்நோக்கம் என்ன என்று உறுப்பினர் கேட்டார்; 'தேர்தலில் தி. மு. க.-வை வெற்றிபெற விடக்கூடாது' என்ற நோக்கத்துடன் இத்தனை பேர் கைது செய்யப்பட்டிருந்தாலும், அந்த நோக்கம் ஈடேறவில்லை"

என்று அண்ணு அவர்கள் பதிலளித்திருப்பது, கட்சி சாராத அரசியல் நோக்கர்களின் ஒருமித்த பாராட்டினைப் பெறும் என்பது உறுதி.

அரசியல் கட்சிகள் நடத்தும் போராட்டங்களில், விரும்பத்தகாத வன்முறைச் சம்பவங்கள் நிகழ்ந்துவிடாமல் பார்த்துக்கொள்வதில் அண்ணு அவர்கள், யாருக்கும் இரண்டாவது வரிசையில் இருப்பவர் அல்லர்!

"தேர்தல் நேர அரசியல் கலவரங்களைக் கிரிமினல் குற்றமாகக் கருதாமல், மேல்மட்டத்தில் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுமா?" என்று கேட்கப்பட்டதற்கு,

**"உறுப்பினரின் மன உணர்வினை என்னுல் புரிந்துகொள்ள முடிகிறது. உண்மையான அரசியல்வாதிகள் இத்தகைய கலவரங்களில் ஈடுபடமாட்டார்கள்; அரசியலை சீரணிக்க முடியாதவர்கள்—அரசியலில் பொறுமையும் பொறுப்பும் இல்லாதவர்கள்தான், இதுபோன்ற கலவரங்களில் தங்களை ஈடுபடுத்திக்கொள்வார்கள்"**

என்று அண்ணு அவர்கள் பதிலளித்திருப்பது, 'போராட்டத்துக்கும்—கழகத்துக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு' என்று அன்று கூறிவிட்டு, இன்று, 'எப்படியாவது ஒரு போராட்டம் நடத்தவேண்டும்' என்று 'துடி'த்துக்கொண்டிருப்பவர்களுக்குத் தந்துள்ள அரசியல் அறிவுரையாகும்!

"தமிழர்கள் வாழும் இலங்கைக்கு இந்த மாநிலத்தைச் சேர்ந்தவர் ஒருவரை இந்தியத் தூதுவராக நியமிக்கவேண்டும்" என்று முதலமைச்சரும், மற்றைய எல்லாக் கட்சி உறுப்பினர்களும் தெரிவித்துக்கொண்டிருக்கின்ற விருப்பத்தில் காங்கிரசார் கலந்துகொள்ளாமல் போனது மட்டுமல்ல—'அயல் நாட்டு விவகாரத்தைப்பற்றி இந்தச் சட்டமன்றம் எப்படி விவாதிக்கலாம்' என்று ஒழுங்குப் பிரச்சினை எழுப்புவதில் மட்டுமே கவனம் சென்றிருப்பது வருந்தத்தக்கதாகும்.

கேள்வி நேரத்துக்குப்பின் துவங்கிய நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில், கழக உறுப்பினர்கள் **எம். எஸ். மணி, எம். எஸ். சிவசாமி,** திருப்பூர் **துரைசாமி, துரைராஜ், மேத்தா, இராமசாமி, பொன்னுமலை** ஆகியோர் பங்கு கொண்டிருக்கின்றனர்.

பஸ் போக்குவரத்தினைத் தேசியமயமாக்கும்வகையில் கழக அமைச்சரவை மேற்கொண்டுள்ள மும்முனைத் திட்டம் பெற்றுள்ள வரவேற்பினை உணர்ந்தவகையில்தாஞே என்னவோ—திருச்சி **எம். எஸ். மணி,** 'லாரி போக்குவரத்தினையும் தேசியமயமாக்கிவிட வேண்டும்' என்று கோரியிருக்கிருர்.

முன்பு நகரத்தில் ஓடிக்கொண்டிருந்த அரசினர் பஸ்களுக்கான 'பாடி'களைத் தனியார் நிறுவனம் ஒன்று கட்டிக்கொண்டிருந்த நிலையை, இப்போது கழக அமைச்சரவை மாற்றி, அரசினர் தொழிற்சாலையிலேயே உற்பத்தி செய்ய ஆரம்பித்திருப்பதை அவர் சுட்டிக்காட்டியிருப்பது, முன்னுள் ஆளும் கட்சி உறுப்பினர்களைத் துணுக்குறச் செய்திருக்க வேண்டும்.

'அந்த ஊரையே சேர்ந்தவர்' என்ற முறையில், தூத்துக்குடித் துறைமுகம்பற்றி **எம். எஸ். சிவசாமி** வலியுறுத்தியிருப்பது, ஏற்கனவே வெளியாகியுள்ள முதலமைச்சரின் அறிவிப்புக்கு மேலும் மெருகு சேர்க்கிறது.

**"ரூ. 14 கோடி கடனைத் தள்ளிவைக்க முடியாது என்று கூறும் மத்திய அரசு எத்தனைத் தனிப்பட்ட முதலாளிகளுக்குச் சலுகை கொடுத்திருக்கின்றது? ரூ. 528 கோடி வருமான வரி பாக்கி வைத்திருக்கும் முதலாளிகளுக்குச் சலுகை கொடுத்திருக்கும் மத்திய அரசு, தமிழகம் தர வேண்டிய ரூ. 14 கோடி வட்டியை ஒத்திவைத்தால் என்ன?"**

என்று கேட்டு, அரிசி மானியத்துக்குப் புதுடில்லி கைவிரித்த போக்கினை, 'நியாயமற்றது' என விளக்கியிருக்கும் பெரியகுளம் மேத்தாவின் வாதம், காங்கிரசு உறுப்பினர்கள் தெரிந்துகொள்ளவேண்டிய உண்மையாகும்.

"சாதி அடிப்படையில் இருந்த கல்விச் சலுகையை வருமான அடிப்படைக்கு மாற்றியிருப்பதும், மத்திய—மாநில அரசுகளிடையே மறைந்து கிடந்த நிதி உறவுகளை வெளிப்படுத்தியிருப்பதும், அண்ணுவின் பட்ஜெட்டில் உள்ள புரட்சிகரமான திட்டங்களாகும்"

என, **சங்கரன்கோயில் துரைராஜ்** பாராட்டியிருப்பது, கருத்தைக் கவரும் விமர்சனமாக இருக்கிறது.

"தோட்டத் தொழிலாளர்கள் வாழும் வால்பாறைப் பகுதிக்கும் படி அரிசித் திட்டத்தை அமுலாக்கவேண்டும்" என்ற கோரிக்கையை இ. இராமசாமியும், 'சேலம் மாவட்ட கிராமங்களுக்குக் குடிநீர் வசதி தேவை' என்ற கோரிக்கையை **பனமரத்துப்பட்டி பொன்னுமலையும்** தெரிவித்திருக்கின்றனர்.

தமிழகப் பஞ்சாலைத் தொழில் மத்திய அரசின் வரியினுல் நெருக்கடி நிலையைப் பெற்றிருப்பது பற்றி **திருப்பூர் துரைசாமி,** புதுடில்லியின் கவத்துக்குக் கொண்டுவந்திருக்கிருர்.

குறிப்பிட்ட அளவில் பஸ் போக்குவரத்து தேசியமயமாவதனையொட்டிப் பத்திரிகைகள் வாயிலாகப் பலவித கருத்துக்கள், யோசனைகள் வெளியாகின்றன; 'தேசியமயமாகும்போது, அந்தந்த நிலையங்களில் உள்ள தொழிலாளர்கள் வேலை இழக்கும் நிலை எழக்கூடாது' என்பது அவைகளில் ஒன்று; இதையே கம்யூனிஸ்டு உறுப்பினர் ஒருவர், அரசின் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளார்.

'ஆடு நனைகிறதே என்று ஓநாய் அழுவதாக'த்தான் பழமொழி கூறுவார்கள்; ஆனல், காங்கிரசு உறுப்பினர் ஒருவர் பேசியிருப்பதைப் பார்த்தால், 'ஓநாய் நனைகிறதே என்று ஆடு அழுததாம்' என்ற அளவுக்கு அந்தப் பழமொழியை மாற்றிக்கொள்ளவேண்டும் போலிருக்கிறது!

விவசாய வருமான வரி, ஒரு குறிப்பிட்ட அளவுக்குமேல் நிலம் படைத்தவர்களுக்கு விதிக்கப்படும் ஒன்று; அது, வசதி படைத்தவர்களையே தொடர்புபடுத்துகிறது என்பதால் நிதிநிலை அறிக்கையில் மேலும் உயர்த்தப்பட்டிருக்கிறது; 'விவசாயிகளுக்கு வாழ்வளிப்பதாக இது அமையவில்லை; உழவர்கள் அதிகாரிகளின் தயவை நாடிச் செல்லும் வகையில் விவசாய வருமான வரி அமைந்திருப்பது வருந்தத்தக்கது' என்று அந்தக் காங்கிரசு உறுப்பினர் கூறியிருக்கிருர்!

உழவர்கள் யார்—விவசாய வருமான வரி விதிக்கப்படுவது யாருக்கு என்பதனை, இனியேனும் அவர் தெரிந்துகொள்வது நல்லது!

# தாயகம் திரும்பும் என். வி. நடராசன்

## சிறப்பான வரவேற்பளிக்க சென்னை மாவட்ட தி. மு. க. ஏற்பாடு

மலேசியா—சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டு திரும்பும் கழக அமைப்புச் செயலாளர் திரு. என். வி. நடராசன் எம்.எல்.சி. அவர்களும், திண்டுக்கல் மா. தங்கவேலரும், 24—6—67 இரவு 8-மணியளவில் விமானம் மூலம் மீனம்பாக்கம் வந்தடைவார்கள்.

விமான நிலையத்தில் சென்னை மாவட்ட தி. மு. க. சிறப்பானதொரு வரவேற்பு அளிக்கும்.

சென்னை மாவட்ட தி. மு. க. பிரதிநிதிகளும், பகுதி—கிளைக் கழக—துணைமன்ற நிர்வாகிகளும், தோழர்களும் திரளாக மீனம்பாக்கம் விமான நிலையத்திற்கு முன்கூட்டியே வந்திருந்து சிறப்பிக்குமாறு சென்னை மாவட்ட தி. மு. க. செயலாளர் நீலநாராயணன் கேட்டுக்கொள்கிருர்.

# நூல் விற்பனை நிலையம் காஞ்சியில் துவக்கம்

### அமைச்சர் வேண்டுகோள்

காஞ்சிபுரம், ஜூன் 22—

தமிழ்நாட்டிலேயே முதலாவது நூல் விற்பனை நிலையத்தை, தொழில் அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் இன்று இங்கு துவக்கி வைத்தார்.

கைத்தறி நெசவாளர்களுக்குக் குறைந்த விலையில் நூல் கிடைக்கச் செய்வது இந்நிலையத்தின் நோக்கமாகும்.

விற்பனை நிலையத்தைத் துவக்கி வைத்து அமைச்சர் பேசுகையில், நெசவாளர்கள் இதை நல்லமுறையில் பயன்படுத்தி, மற்ற நெசவாளர் வாழும் பகுதிகளுக்கும் இதனை விரிவுபடுத்துவதற்கு உதவ வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

# அனுதைக் குழந்தைகளுக்கு உதவித் தொகை அதிகரிப்பு

### 'பரிசீலனை செய்யப்படும்' என்கிருர் அமைச்சர்

சென்னை, ஜூன் 22—

"அனுதை இல்லங்களிலுள்ள குழந்தைகளுக்குத் தலா ரூ. 10 வீதம் தரும் உதவித் தொகையை, ரூ. 15 ஆக உயர்த்துவதற்கு அரசு பரிசீலனை செய்யும்"

என்று சட்டமன்ற மேலவையில், அமைச்சர் சாதிக்பாட்சா, கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

# கும்முடிப்பூண்டித் தொகுதியில்

அமைச்சர்

## கே. ஏ. மதியழகன்

### நிகழ்ச்சிகள்

ஜூன் 25: மாலை 5-மணி: கும்முடிப்பூண்டி ஊராட்சி ஒன்றிப்பு வரவேற்பு; 6-30 மணி: எளாவூர்—தி.மு.க. பொதுக்கூட்டம்: இரவு 8-மணி: ஆரம்பாக்கம்—பொதுக்கூட்டம்.

குறிப்பு :—எல்லா நிகழ்ச்சிகளிலும் சட்டமன்ற உறுப்பினர் கா. வேழவேந்தனும் கலந்துகொள்கிருர். பொதுமக்கள் தங்கள் கோரிக்கை மனுக்களை சட்டமன்ற உறுப்பினர் மூலம் அமைச்சரிடம் அளிப்பர்.

### நாடகம்

கருங்கல்பாளையம் எம். ஜி. ஆர். மன்ற நிதிக்காக ஈரோடு ஓம் சண்முகா கலையரங்கில், 25-6 67 இரவு 7-மணிக்கு நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி தலைமையில், 'கடமை' என்னும் நாடகம் நடைபெறும்.

# நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

## 24--6--67

**நெமிலி**

தி. மு. க. சார்பில் மாலை 5-மணிக்கு; தலைவர்: ஏ. பொன்னுசாமி; பேசுவோர்: அமைச்சர் கே. ஏ. மதியழகன், சி. வி. எம். அண்ணுமலை எம்.எல்.ஏ., டி. கே. பொன்னுவேலு பி.ஏ., டி. என். திருமலை, ஏ. பி. இராமச்சந்திரன், ஏ. பரந்தாமன் பி.எஸ்சி., பி. கோவிந்தசாமி.

**ஆற்காடு குப்பம்**

தி. மு. க. சார்பில் இரவு 8-மணிக்கு; தலைவர்: இலட்சுமணன்: பேசுவோர்: அமைச்சர் கே. ஏ. மதியழகன், சி. வி. எம். அண்ணுமலை எம்.எல்.ஏ., டி. கே. பொன்னுவேலு பி.ஏ., ஏ. பரந்தாமன் பி.எஸ்சி., பி. கோவிந்தசாமி, தணிகை வளவன்.

## 25--6--67

**நாகூர்**

செந்தமிழ்ப் படிப்பக ஒன்பதாம் ஆண்டு விழா; மாலை 5-30 மணிக்கு புகைவண்டி நிலையம் அருகில்; தலைவர்: எஸ். எம். சரீப் எம்.ஏ.,எம்.பி.; பேசுவோர்: அமைச்சர் சாதிக்பாட்சா, சி. பி. சிற்றரசு எம்.எல்.சி., புலவர் அறிவுடைநம்பி, எல். கணேசன் பி.ஏ.பி.எல்., எம்.எல் ஏ.; இசை: நாகூர் அனீபா.

**பெங்களூர்**

20–வது வட்ட தி. மு. க. சார்பில் மாலை 5-30 மணிக்கு இரண்டாவது வீதியில் (பென்னி மில் அருகில்); தலைவர் ம்ா. மன்னுர்; பேசுவோர்: அமைச்சர் சத்தியவாணிமுத்து, திராவிடமணி, இளஞ்சேரன், ஏ. கண்ணன், உலகநாதன் எஸ். என். நர்ராயணன்,

**திருமங்கலக்கோட்டை**

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு கீழக் "காலனி துவக்கப் பள்ளி எதிரில்; தலைவர்: மு. கோவிந்தராசன்; பேசுவோர்: ஒய். சேவியர், திருமதி கிரேசி சேவியர், துரை. கோவிந்தராசன், என். சுவாமிநாதன், வே. இராமச்சந்திரமூர்த்தி, மு. தங்கப்பன், எஸ். கே. மணி, சி. திராவிடமணி.

**பரவை**

தாளமுத்து—நடராசன் நினைவுப் படிப்பக 14–ஆம் ஆண்டு விழா: மாலை 6-மணிக்கு பாரதி திடலில்; தலைவர்: கா. இராசமணி; பேசுவோர்; சி. தமிழரசி பி.ஏ., கார்மேகம், சா. முத்துப்பாண்டி, நா. கிருட்டினன், மு. பழனிவேல், கா. அயோத்தி.

**சென்னை 67-வது வட்டம்**

தி. மு. க. சார்பில் மாலை 7–மணிக்கு வீராசாமி பிள்ளைத் தெருவில்; தலைவர்: சி. நரசிம்மன்; பேசுவோர்: அமைச்சர் மு. கருணுநிதி, எ.வி.பி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ., மைனர் மோசஸ் பி.ஏ.பி.எல்., கி. பாஸ்கரன் எம்.சி., கு. வீராசாமி.

### திருமணம்

ஒரகடம் ஊராட்சிமன்றத் தலைவர் மு. குப்புசாமிக்கும்—தோழியர் கனகவல்லிக்கும் 25—6—67 காலை 7-30 மணியளவில் அமைச்சர் கே. ஏ. மதியழகன் தலைமையில் திருமணம் நடைபெறும்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.